# உபக்கிரமணிகை.

அவசியம் அடைதற்பாலனவாகிய அறம், பொருள், இன்பம், வீடு என்பவைகளையும், அழகு, புகழ், ஆன்றோர்மதிப்பு, அளவிலாமகிழ்ச்சி முதலியவைகளையும் மக்களுயிர்க்குப் பயப்பது யாது? கல்விப்பொருளேயாம். உற்றவிடத்திலே உதவிசெய்வதாயும், கொடுக்குந்தோறுங் குறைவில்லதாயும், கள்வர்முதலியோராற் கவரப்படாததாயுமிருத்தலாற் கல்விப்பொருள் எவராலும் பேணி வைத்திருக்கத் தக்க ஒரு மஹாரத்தினம் என்று ஆசிரியர் பவபூதியார் கூறுகின்றனர். கல்விப்பொருளில்லாதவர் கண்களுடையராயினுங் குருடரெனப்படுவர். "கண்ணுடைய ரென்போர் கற்றோர் முகத்திரண்டு புண்ணுடையர் கல்லா தவர்" என்பது திருவள்ளுவர்.

இக்கல்விப்பொருளும் இலகுவிலே பெறற்பாலதன்று. எத்தனையோ பலநாளாகப் பல நூல்களையும் வருந்திப் படித்துப் பெறற்பாலதொன்றேயாம். தமிழ்நாட்டிலுள்ள நம்மவர்களாலே படிக்கப்படுவன தமிழ்ப்பாஷையிலுள்ள நூல்களாம். தமிழ்ப்பாஷையிலுள்ள நூல்களெல்லாம் பெரும்பாலுஞ் செய்யுள்வடிவமாகச் செய்யப்பட்டிருக்கின்றன. அவைகளிலே அமைந்திருக்குஞ் சொற்களுள்ளே பெரும்பாலன அரிதுணர்தற்பாலனவாகிய திரிசொற்களாம். அத்திரிசொற்களையெல்லாம் நிகண்டு நூல்களைக் கிரமமாகப் படித்து நினைத்திருப்பவரே அறிதற்கு வல்லவராவர். ஆதலால் நிகண்டுநூல்கள் மாணவர்களால் ஆதியிலே அவசியம் படிக்கப்படவேண்டியன என்பதை மறுப்பவர் யாவர்! திவாகரம், பிங்கலம், சூடாமணி முதலியவைகளே தமிழ்ப்பாஷையிலே தற்காலம் படிக்கப்படும் நிகண்டுகளாம். இவையெல்லாவற்றுள்ளும் இங்கே பலராலும் படிக்கப்படுவது சூடாமணிநிகண்டு.

இச்சூடாமணிநிகண்டிலே முதலாவதாகிய தேவப்பெயர்த்தொகுதியிலுள்ள சொற்களுக்குப் பொருள்களெழுதிச் சில வருடங்களுக்கு

முன்னே பிரகடனஞ்செய்தேம். அப்போது வடசொற்களாயுள்ளவ ற்றின் பொருள்களுக்கு இலிங்கபட்டீயமும், ஆபிதானிகங்களும் ஆதா ரமாயின. ஆயினும் பலசொற்களுக்குப் பொருள்களெழுதப்படவில்லை. சில சொற்களின் பொருள்கள் தவறாயின. பிரதிகள் விலைப்பட்டொழி ந்தமையானும், புலப்படாத சிலவற்றின் பொருள்களும், திருத்தங்க ளும் புலப்பட்டமையானும் இரண்டாமுறை பிரகடனஞ்செய்தல் அவசியமாயிற்று.

இப்போது அவைகள் கொண்டும், வடமொழியிலே அகப்பட்ட சில நூலுரைகள் கொண்டும், சில தமிழ்நூலுரைகள் கொண்டும் முன் னர்ப் பொருள்புலப்படாத சொற்களுள்ளே பல சொற்களுக்குப் பொ ருளெழுதப்பட்டிருக்கின்றன. சில சொற்களின் பொருள்கள் திருத் தப்பட்டிருக்கின்றன. சில சொற்களுக்குப் பின்னும் பொருள்கள் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

இவைகட்கு நமது நண்பர்களான யாழ்ப்பாணத்துச் சைவப்பிர காசவித்தியாசாலையின் அத்தியக்ஷரும், செந்தமிழ்ப்பண்டிதரும், செந் தமிழ்ப்பரிபாலகருமாகிய ஸ்ரீமான். த. கைலாசபிள்ளையவர்கள் கொடு த்த நிருத்தமும், மாபாடியமும், ஸ்ரீமான். பண்டிதர் ந. வே. கனக சபாபதியையரவர்கள் கொடுத்த உபநிடதவுரைகளும் பெரிதும் உப காரமாயின.

ஒவ்வொரு சொற்களுக்கும் நிருத்தம்போலப் பகுதி விகுதிகளும் பிறவுங் காட்டிப் பொருள்கூறப்புகின் மிகப்பரக்குமென்றஞ்சி அவை யொன்றுங் கூறாது பொருள்கண்மாத்திரங் கூறப்பட்டன. பொருள் புலப்படாதனவும் பல. வழுவெனக் கண்டவைகளைத் திருத்தி வெளி ப்படுத்துதல் அறிஞர் கடன்.

இங்ஙனம்,

யாழ்ப்பாணத்துச்
சைவப்பிரகாசவித்தியாசாலை
சோபகிருதுஹு சித்திரை மீ.

அ. குமாரசுவாமிப்பிள்ளை.

உ

கணபதிதுணை.

# சூடாமணிநிகண்டு.

## சிறப்புப்பாயிரம்.

பொன்னுநன்மணியுமுத்தும்புனைந்தமுக்குடைநிழற்ற
மின்னுபூம்பிண்டிநீழல்வீற்றிருந்தவனைவாழ்த்தி
மன்னியநிகண்டுசூடாமணியெனவொன்றுசொல்வன்
இந்நிலந்தன்னின்மிக்கோர்யாவருமினிதுகேண்மின். (க)

பூமலியசோகினீழற்பொலிந்தவெம்மடிகண்முன்னா
ளேமமாமுதனூல்சொல்லக்கணதரரியன்றபாவாற்
றாமொருவழிநூல்சொல்லச்சார்புநூல்பிறருஞ்சொல்லத்
தோமிலாமூன்றுநூலுந்துவமெனவுதித்தவன்றே. (உ)

அங்கதுபோயபின்றையலகினூல்பிறந்தமற்றுஞ்
செங்கதிர்வரத்திற்றோன்றுந்திவாகரர்சிறப்பின்மிக்க
பிங்கலருரைநூற்பாவிற்பேணினர்செய்தார்சேர
இங்கிவையிரண்டுங்கற்கவெளிதலவென்றுசூழ்ந்து. (௩)

சொல்லொடுபொருளுணர்ந்தோன்சோதிடநீதிவல்லோன்
நல்லறிவாளனெங்கணாறுங்குன்றைஞானமூர்த்தி
பல்லுயிர்க்கொருதாயாகும்பரமன்மாமுனிவன்மெய்ந்நூல்
வல்லுநர்வல்லார்க்கெல்லாம்வரையறத்தரையில்வந்து. (௪)

பரிதியொன்றுதயஞ்செய்துபங்கயமநேககோடி
முருகெழமலர்வித்தென்னமுகமுடனகமலர்த்தி
மருவுமுத்தமிழைமுன்னாள்வளர்த்தபாண்டியரேபோலக்
கருதியவெல்லாந்தந்துகவிமணிமாலைசூடி. (௫)

செகமெனும்பளிங்குமாடத்திகிரிவேந்தரையேபோலப்
புகழெனும்பஞ்சிசேர்த்திப்பொலிவுறுபோத்தாணி
மகிழ்குணபத்திரனெங்கள்வழித்தெய்வம்போல்வான்சொல்ல
இகபரமிரண்டும்வேண்டியியலிசைவல்லோர்கேட்ப. (சு)

விரவியதேவர்மக்கள்விலங்கொடுமரமிடம்பல்
பொருள்செய்யும்வடிவுபண்புபோற்றியசெயலொலிப்பேர்
ஒருசொற்பல்பொருளினோடுமுரைத்தபல்பெயர்க்கூட்டந்தான்
வருமுறைதிவாகரம்போல்வைத்துப்பிங்கலந்தைதன்னில். (எ)

ஒருங்குளபொருளுமோர்ந்திட்டுரைத்தனன்விருத்தந்தன்னில்
இருந்தவைநல்லோர்குற்றமியம்பிடாரென்பதெண்ணித்
திருந்தியகமலவூர்திதிருப்புகழ்புராணஞ்செய்தோன்
பரந்தசீர்க்குணபத்திரன்றாள்பணிந்தமண்டலவன்றானே. (அ)

சிறப்புப்பாயிர முற்றிற்று.

உ

## முதலாவது

# தேவப்பெயர்த்தொகுதி.

அநகனெண்குணனிச்சிந்தனறவாழிவேந்தன்வாமன்
சினன்வரனுறுவன்சாந்தன்சினேந்திரனீதிநூலின்
முனைவன்மாசேனன்றேவன்மூவுலகுணர்ந்தமூர்த்தி
புனிதன்வென்றோன்விராகன்பூமிசைநடந்தோன்போதன்.

### அருகன்பெயர்.

| பெயர். | பொருள். |
|---|---|
| அருகன் | பூசிக்கத்தக்கவன், மதிக்கத்தக்கவன். |
| அநகன் | பாவமில்லாதவன், துக்கமில்லாதவன், கலக்கமில்லாதவன் (அந்-இன்மை. அகம்-பாவம், துக்கம், கலக்கம்.) |
| ‡ எண்குணன் | எட்டுக்குணங்களுடையவன். |
| நிச்சிந்தன் | சிந்தித்தற்கரியவன். |
| அறவாழிவேந்தன் | அறச்சக்கரத் தலைவன். |
| வாமன் | வணங்கப்படத் தக்கவன். |
| சினன் | வினைகளைவென்றவன், பூசிக்கத்தக்கவன். |
| வரன் | சிறந்தவன், தலைவன். |
| உறுவன் | யாவரினுமிக்கவன். |
| சாந்தன் | பொறுமையுடையவன், மகிழ்ச்சியுடையவன். |
| சினேந்திரன் | * எண்வகைக் கன்மங்களையும் வென்றவன். |
| முனைவன் | முதல்வன். |
| மாசேனன் | பெரிய சேனையுடையவன் |
| தேவன் | பிரகாசமுடையவன், மகிழ்ச்சியுடையவன். |
| மூவுலகுணர்ந்தமூர்த்தி | மூன்றுலகங்களாலு மறியப்பட்ட கடவுள். |
| புநிதன் | சுத்தமுடையவன், புதியவன். |
| வென்றோன் | வினைகளை வென்றவன். |
| விராகன் | இச்சையில்லாதவன். |
| பூமிசைநடந்தோன் | தாமரைப்பூவை வாகனமாகக்கொண்டுசென்றவன். |
| போதன் | அறிவுடையவன். (௧) |

பண்ணவன்கமலவூர்திபரமேட்டிகாதிவென்றோன்
புண்ணியன்புலவன்புத்தன்பூரணன்பொன்னெயிற்கோன்
விண்ணவன்விமலன்வீரன்விநாயகன்வீதசோகன்
அண்ணல்வின்மதனைவென்றோனருட்கொடிவேந்தனாசான்.

---

‡ எண்குணங்களாவன: முடிவிலாவறிவு, முடிவிலாக்காட்சி, முடிவிலாவீரியம், முடிவிலாவின்பம், நாமமின்மை, கோத்திரமின்மை, ஆயுவின்மை, அழிவின்மை என்பன.

* எண்வகைக் கன்மங்களாவன: ஞானாவரணீயம், தரிசனாவரணீயம், வேதநீயம், மோகநீயம், ஆயுஷ்யம், நாமம், கோத்திரம், அந்தராயம் என்பன.

**பெயர். பொருள்.**

பண்ணவன்—தகுதியுடையவன்.
கமலவூர்தி—தாமரைப்பூவாகிய வாகனமுடையவன்.
பரமேட்டி—மேலானவிடத்தில் இருப்பவன்.
காதிவென்றோன்—+ உபாதிகளைவென்றவன்.
புண்ணியன்—நற்செயலுடையவன்.
புலவன்—எல்லார்க்குமறிவாயுள்ளவன்.
புத்தன்—அறிவுடையவன்.
பூரணன்—நிறைவுடையோன்.
பொன்னெயிற்கோன்—(உதயதரம் பிரீதிதரம் கல்யாணதரம் என்னும்) பொன்மதில்களுக்குத் தலைவன்.
விண்ணவன்—சுவர்க்கவாசி
விமலன்—மலமில்லாதவன்.
வீரன்—முடிவில்லாத வீரியமுடையவன்.
விநாயகன்—உயிர்களுக்கு உறுதிபோதிப்பவன்.
வீதசோகன்—சோகமில்லாதவன்.
அண்ணல்—பெருமையுடையவன்.
மதனைவென்றோன்—மன்மதனை வென்றவன்.
அருட்கொடிவேந்தன்—அருளாகிய கொடியையுடைய தலைவன்.
ஆசான்—குருமூர்த்தியாயுள்ளவன். (௨)

முத்தன்மாமுனிகருத்தன்முக்குடைச்செல்வன்முன்னோன்
சித்தனெண்சிறப்புமுள்ளோன்றிகம்பரன்கொல்லாவேதன்
நித்தனின்மலனின்னாமனிராயுதனேமிநாதன்
அத்தனானந்தன்சோதியரியணைச்செல்வனாதி.

முத்தன்—காமாதிகளால் விடப்பட்டவன், பாசங்களால் விடப்பட்டவன்.
மாமுனி—விருப்பு வெறுப்பு முதலியன நீங்கினவர்களுள்ளேமிக்கவன்.
கருத்தன் — உலகத்தைப் படைத்தவன்.
முக்குடைச்செல்வன்—மூன்று குடைகளாகிய சிறப்புடையவன்.
முன்னோன்—எவர்க்கும் முன்னுள்ளவன்.
சித்தன்—செயற்பாலனவற்றைச் செய்து முடித்தவன், எண்வகைச்சித்திகளையுமுண்டாக்கினவன்.
எண்சிறப்புமுள்ளோன்—† எட்டாகிய சிறப்புகளுடையவன்.
திகம்பரன்—திக்கினைவஸ்திரமாகவுடையவன், வஸ்திரமில்லாதவன்.
கொல்லாவேதன்—கொல்லாமை போதிக்கும் வேதகர்த்தா.
நித்தன்—பிறப்பிறப்பற்றவன்.
நின்மலன்—மலமில்லாதவன்.
நின்னாமன்—நாமமின்மையுடையவன்.
நிராயுதன்—ஆயுதம் பிடியாதவன்.
நேமிநாதன்—அருளாழிக்குத்தலைவன்.
அத்தன்—அகிலகாரணமானவன், மெய்ப்பொருளாயுள்ளவன்.
ஆனந்தன்—இன்பமுடையவன்.
சோதி—ஒளியாகி நிற்பவன்.
அரியணைச்செல்வன்— சிங்காசனமாகிய சிறப்புடையவன்.
ஆதி—பிரபஞ்சகாரணன். (௩)

---

+ உபாதிகள் ஞானாவரணீயம் முதலியன.

† எட்டுச்சிறப்புக்களுமிவை என்பதைச் "சுடர்மண்டலஞ்சுரதுந்துபிதெய்வத்துவனிசிங்கப்- பிடர்மண்டல வணைபிண்டிவெண்சாமரைபெய்ம்மலரி- னடர்மண்டலமழையம்பொற்குடைமும்மையாமடியோ- மிடர்மண்டலங்கெடுப்பாற்கிமையோர்செயுமெண்சிறப்பே" என்னுந் திருநூற்றந்தாதியானுணர்க.

ஆத்தன்குற்றங்களில்லானசோகமர்கடவுளாதன்
சாத்தன்வேதாந்தனுதன்சமியநாமயன்சுயம்பு
நீத்தவன்பிதாவிதாதாநிரம்பரனநந்தஞானி
தீர்த்தன்மால்பகவன்சாமிசீபதிசீமான்செய்யோன்.

| பெயர். | பொருள். |
|---|---|
| ஆத்தன் | சத்தியமுடையவன், தக்கவன். |
| குற்றங்களில்லான் | (பசிமுதலிய) குற்றங்களில்லாதவன். |
| அசோகமர்கடவுள் | அசோகமர நீழலிலிருக்கும் கடவுள். |
| ஆதன் | முதன்மையுடையவன். |
| சாத்தன் | துட்டர்களைத் தண்டிப்போன். |
| வேதாந்தன் | வேதத்தின் முடிந்தபொருளாயுள்ளவன். |
| நாதன் | தலைவன். |
| சமி | அந்தக்கரணங்களையடக்கினவன். (விருப்பு வெறுப்பிற்) சமமுடையோன். |
| அநாமயன் | நோயில்லாதவன். |
| சுயம்பு | தானேதோன்றினவன். |
| நீத்தவன் | பற்றினை நீக்கினவன். |
| பிதா | உயிர்கட்குத் தந்தை. |
| விதாதா | சிருட்டிப்பவன். |
| நிரம்பரன் | வஸ்திரமில்லாதவன். |
| அநந்தஞானி | முடிவில்லாத ஞானமுடையவன். |
| தீர்த்தன் | நியமிப்பவன், மேன்மையுடையவன். |
| மால் | பெருமையுடையவன். |
| பகவன் | o கேவலஞானமுடையவன். |
| சாமி | எல்லாமுடையவன். |
| சீபதி | திருவுக்கு நாயகன். |
| சீமான் | ‡ ஸ்ரீயையுடையவன். |
| செய்யோன் | நேர்மையுடையவன். () |

நிருமலன்வரதன்சாதுநிரஞ்சனன்விறலோன்யோகி
தருமராசன்யுகாதிசதுர்முகன்சாதரூபி
திருமறுமார்பனீடுசிவகதிக்கிறைதொண்ணூறே
அருகன்பேராகுமற்றுமபிதானமநந்தமாமே.

| பெயர். | பொருள். |
|---|---|
| நிருமலன் | மலமில்லாதவன். |
| வரதன் | வரங்கொடுப்பவன். |
| சாது | நேர்மையுடையவன், காரியங்களைச் செய்து முடிப்போன், நல்லொழுக்கமுடையவன். |
| நிரஞ்சனன் | குற்றமில்லாதவன். |
| விறலோன் | வலிமையுடையவன். |
| யோகி | யோகமுடையவன். |
| தருமராசன் | தருமங்களுக்குத் தலைவன். |
| யுகாதி | யுகமுதல்வன். |
| சதுர்முகன் | நான்குமுகங்களுடையவன். |
| சாதரூபி | சித்திரமானரூபமுடையவன் |
| திருமறுமார்பன் | திருவென்னும் மறுவமைந்த மார்புடையவன். |
| சிவகதிக்கிறை | வீட்டுலகிற்கு நாயகன். |

சங்கரனிறையோன்சம்புசதாசிவன்பேயொடாடி
பொங்கரவணிந்தமூர்த்திபுராந்தகன்பூதநாதன்

---

o கேவலஞானம்—திரிகாலவுணர்ச்சி. இதன்பொருளும், அருகன்பெயர்களுள்ளே வேறு பல சொற்களின் பொருளும் சிலப்பதிகாரத்து நாடுகாண்காதையுரையிற் கண்டது.

‡ ஸ்ரீ—அலங்காரம், செல்வம், ஒளி, புத்தி.

கங்கைவேணியன்கங்காளன்கடுக்கையங்கண்ணிசூடி
மங்கையோர்பாகன்முன்னோன்மகேச்சுரன்வாமதேவன்.

சிவன்பெயர்.

| பெயர். | பொருள். | பெயர். | பொருள். |
|---|---|---|---|

சிவன்—சுகத்தோடுகூடினவன், விகாரமில்லாதவன், நல்லோருடைய மனந் தம்மிடத்திலே கிடக்கப்படுபவன், நல்லோர் மனத்திற்கிடப்பவன், நன்மையுடையவன், நன்மைகொடுப்பவன், ஒளியுடையவன், முத்திகொடுப்பவன்.
சங்கரன்—சுகஞ்செய்பவன்.
இறையோன்—எங்குந் தங்குதலுடையவன்.
சம்பு—சுகஞ்செய்பவன்.
சதாசிவன்—எப்பொழுதும் நன்மைசெய்பவன்.
பேயோடாடி—பேயோடு ஆடுபவன்.
அரவணிந்தமூர்த்தி—பாம்பணிந்த வடிவமுடையவன்.
புராந்தகன்—முப்புரங்களையழித்தவன்.
பூதநாதன்—பூதகணங்களுக்குத் தலைவன், உயிர்களுக்குத் தலைவன்.
கங்கைவேணியன் — கங்கைதரித்த சடையுடையவன்.
கங்காளன்—முழுவெலும்பு தரித்தவன்.
கடுக்கையங்கண்ணிசூடி — கொன்றைமாலையணிந்தவன்.
மங்கையோர்பாகன்—தேவியை ஒருபாகத்திலுடையவன்.
முன்னோன்—எல்லார்க்கும் முன்னானவன்.
மகேச்சுரன் — மேலாகிய ஐசுவரியமுடையவன், ஈசுவரருள்ளே மிக்கோன்.
வாமதேவன்—மேலானதேவன், இடப்பக்கத்திற் றேவியையுடையவன்.

நீலகண்டன்மாதேவன்நிருமலன்குன்றவில்லி
சூலபாணியனீசானன்பசுபதிசுடலையாடி
காலகாலன்கபாலியுருத்திரன்கைலையாளி
ஆலமர்கடவுணித்தனைம்முகன்பரசுபாணி.

நீலகண்டன்—கரியகழுத்துடையவன்.
மாதேவன்—மேலான தேவன், பெரிய ஒளிமயமானவன்.
நிருமலன்—மலமில்லாதவன்.
குன்றவில்லி—மலையாகிய வில்லையுடையவன்.
சூலபாணியன்—சூலந்தரித்த கையுடையவன்.
ஈசானன் — மகாசாமர்த்தியமுடையவன்.
பசுபதி—ஆன்மாக்களைக் காப்பவன்.
சுடலையாடி— சுடலையிலாடுதலுடையவன்.
காலகாலன்—யமனுக்கும் முடிவுசெய்தவன்.
கபாலி— தலையோட்டினைத்தரித்தவன்,
உருத்திரன் — பகைவரையழுவிப்போன், துக்கத்தினை நீக்குவோன், *தீங்கினை நீக்குவோன், சமுசாரபந்தத்தினின்றும் உயிர்களை விடுவிப்போன், சப்தமயப்பிரபஞ்சத்தினைத் தன்வசஞ்செய்தவன், எல்லாச் சொற்களாலுஞ் சொல்லப்படுவோன், பிரமஞானத்தைப் போதிப்பவன், மௌன சமாதியைப் போதிப்பவன், பிரமவித்தையினால் உயிர்களுடைய அறியாமையைக் கரைப்பவன், ஆன்மாக்களால் அழுதடையப்படுபவன், தமோகுணத்தைத் தன்வசப்படுத்திக்கொண்டவன், உயிர்களிடத்துள்ள அஞ்ஞானநிமித்தந் துயருறுவோன், எவ்வுலகிற்கும் அச்சங்கொடுப்பவன்.

* இது முதலிய பொருள்கள் சாபாலவுபநிடதவுரையிற் கண்டது.

பெயர். — பொருள்.

கைலையாளி—கைலாசமலையில் வசிப்பவன்.
ஆலமர்கடவுள்— கல்லாலின்புடையிருந்த கடவுள்.
நித்தன்—பிறப்பிறப்பற்றவன்.
ஐம்முகன்—ஈசானமுதலிய ஐந்துமுகங்களுடையவன்.
பரசுபாணி—மழுவாயுதந்தரித்த கையுடையவன். (எ)

அந்திவண்ணன்முக்கண்ணனழலாடிபாண்டரங்கன்
சந்திரசேகரனானந்தன்சடைமுடியநந்தனாதி
தந்தியீருரியோனம்பன்றற்பரனீறணிந்தோன்
நந்தியீச்சுரனேறூர்ந்தோனக்கன்மாஞானமூர்த்தி

அந்திவண்ணன் — செந்நிறமுடையவன்.
முக்கண்ணன்— மூன்றுகண்களுடையவன்.
அழலாடி—அழலிலாடுதலுடையவன்.
பாண்டரங்கன்— பாண்டரங்கமென்னுங் கூத்துடையவன்.
சந்திரசேகரன்—சந்திரனைச்சிரபூஷணமாகவுடையவன்.
ஆனந்தன்— பெருமகிழ்ச்சியுடையவன்
அநந்தன்—அழிவில்லாதவன், அளவிலடங்காதவன்.
ஆதி—உற்பத்திக்குக் காரணன்.
தந்தியுரியோன்—யானைத்தோலுடையவன்.
நம்பன்—விரும்பப்படுபவன்.
தற்பரன்—ஆன்மாவுக்கு மேலானவன்.
நீறணிந்தோன்—விபூதியணிபவன்.
நந்தி—மகிழ்ச்சியுடையவன்.
ஈச்சுரன்—மகாமகிமையுடையவன்.
ஏறூர்ந்தோன்—இடபவாகனம் செலுத்துபவன்.
நக்கன்—சங்காரகருத்தன், நிருவாணி.
ஞானமூர்த்தி— அறிவுருவாயுள்ளவன்.

வரன்மறைமுதலியீசன்மானிடமேந்திசோதி
பிரமன்மாற்கரியோன்றாணுபிஞ்சகன்பினாகபாணி
பரமனெண்டோளன்பர்க்கன்பவன்யோகிபகவானேகன்
அரனுமாபதிசிவன்பேரறுபத்தாறநந்தமற்றும்.

வரன்—மேலானவன்.
மறைமுதலி—வேதத்திற்கு முதல்வன்.
ஈசன்—எல்லாமேன்மையுமுடையவன்
மானிடமேந்தி—மானை இடப்பக்கத்திலேந்தினவன்.
சோதி—ஒளிவடிவாயுள்ளவன்.
பிரமன்மாற்கரியோன்— பிரமவிட்டுணுக்களாலறியப்படாதவன்.
தாணு—அசைவில்லாதவன், ஊழியிலுநிலைபெறுபவன்.
பிஞ்சகன் — தலைக்கோலமுடையவன், சங்காரகர்த்தன்.
பினாகபாணி—பினாகமென்னும் வில்லுத்தரித்த கையுடையவன்.
பரமன்—மகிமையுடையவன்.
எண்டோளன்—எட்டுப்புயமுடையவன்
பர்க்கன்—ஒளியுடையவன்.
பவன்—எல்லாவற்றையும் பிறப்பிப்பவன்.
யோகி—யோகமுடையவன்.
பகவான்—மகிமை, வீரியம், புகழ், திரு, ஞானம், வைராக்கியம் என்னும் ஆறுமுடையவன்.
ஏகன்—முக்கியமுடையவன்.
அரன்—முடிவில் எல்லாவற்றையுமழிப்பவன், மலத்தினை அழிப்பவன், உயிர்களை உயர்ந்தநிலையிற் போகச்செய்வோன்.
உமாபதி—பார்வதிதேவிக்கு நாயகன்.

இலகுமோர்குண்டலன்மற்றிரேவதிகொண்கன்முற்றும்
நிலவியமுசலிவெள்ளைநீலாம்பரனநந்தன்
அலமுறுபடையாக்கொண்டோனச்சுதன்முன்னர்வந்தோன்
பலபத்திரன்காமபாலன்பனந்தாமன்பலதேவன்பேர்.

### பலதேவன்பெயர்.

| பெயர். | பொருள். |
|---|---|
| பலதேவன் | சாமர்த்தியத்தால் விளங்குவோன். |
| ஓர்குண்டலன் | ஒற்றைக் குண்டலமுடையவன். |
| இரேவதிகொண்கன் | இரேவதிதேவிக்கு நாயகன். |
| முசலி | உலக்கைப்படையுடையவன். |
| வெள்ளை | வெண்ணிறமுடையவன். |
| நீலாம்பரன் | கரியவஸ்திரமுடையவன். |
| அநந்தன் | சேடாவதாரமாயுள்ளவன். |
| அலப்படைகொண்டோன் | கலப்பையை ஆயுதமாகவுடையவன். |
| அச்சுதன்முன்னர்வந்தோன் | கிருஷ்ணனுக்கு முன் பிறந்தவன். |
| பலபத்திரன் | சாமர்த்தியத்தினாலே மிக்கவன். |
| காமபாலன் | மன்மதனைக்காப்பவன். |
| பனந்தாமன் | பனைவடிவமான கொடியுடையவன். (௧௦) |

மாதவன்மாயன்செய்யவாமனன்வாசுதேவன்
சீதரனந்தகோபன்றிருமகனுவணமேற்ற
கேதனன்பதுமநாபன்கேசவன்பஞ்சவர்க்குத்
தூதனேசார்ங்கபாணிசுரிமுகச்சங்கமேந்தி.

### அரியின்பெயர்.

| பெயர். | பொருள். |
|---|---|
| அரி | அடியர்துயர் களைபவன், பகைவரையழிப்பவன். |
| மாதவன் | இலக்குமிக்கு நாயகன், மதுவித்தை என்னும் வேதபாகத்தினாற் புகழப்பட்டவன், மௌநதியாநயோகங்களுடையவன், மதுவென்பவன்மரபிற் பிறந்தவன். |
| மாயன் | மாயமுடையவன், அதிசயமான செயலுடையவன், கருநிறமுடையவன். |
| வாமனன் | குறள்வடிவுடையவன். |
| வாசுதேவன் | வசுதேவனுடைய புத்திரன். |
| சீதரன் | இலக்குமியை மார்பிலே தரித்தவன். |
| நந்தகோபன்மகன் | நந்தனாகிய இடையனுக்கு மகன். |
| உவணகேதனன் | கருடக்கொடியுடையவன். |
| பதுமநாபன் | நாபியிற் றாமரைப்பூவுடையவன். |
| கேசவன் | அழகிய மயிருடையவன், ‡ கேசியென்னுமசுரனைக் கொன்றவன். |
| பஞ்சவர்க்குத் தூதன் | (தருமன்முதலிய) ஐவர்க்குந் தூதுசென்றவன். |
| சார்ங்கபாணி | சார்ங்கமென்னும் வில்லைக் கையிலுடையவன். |
| சங்கமேந்தி | (பாஞ்சசன்னியமென்னும்) சங்கினையேந்தினவன். (௧௧) |

கொண்டல்வண்ணன்காகுத்தன்கோவிந்தனச்சுதன்மால்
விண்டுவேலையிற்றுயின்றோன்விரகினாலுந்திபூத்தோன்

---

‡ கேசி-கஞ்சனாலனுப்பப்பட்டுக் குதிரைவடிவாய் வந்த ஓரசுரன்.

வண்டுழாய்மவுலி பாதிவராகன் வைகுண்டநாதன்
முண்டகாசனைகேள்வன்றாமோதரன்முராரிநேமி.

| பெயர். | பொருள். |
|---|---|
| கொண்டல்வண்ணன் | கருநிறமுடையவன். |
| காகுத்தன் | * ககுத்தனுடைய மரபிற் பிறந்தவன். |
| கோவிந்தன் | பசுக்களையடைந்தவன், சலத்திலே யமிழ்ந்திய பூமியைப் பன்றியாயடைந்தவன். |
| அச்சுதன் | அழிவில்லாதவன், தன்னுடைய தானத்தினின்றும் பெயராதோன். |
| மால் | பெருமையுடையவன் |
| விண்டு | வியாபகமுடையவன். |
| வேலையிற்றுயின்றோன் | பாற்கடலில் நித்திரைசெய்பவன். |
| உந்திபூத்தோன் | உந்தியிலே தாமரைப்பூவுடையவன். |
| துழாய்மௌலி | முடியிலே துளவமாலையையுடையவன். |
| ஆதிவராகன் | முதன்மையான பன்றியவதாரமுடையவன். |
| வைகுண்டநாதன் | வைகுண்டத் தலைவன். |
| முண்டகாசனைகேள்வன் | இலக்குமிக்கு நாயகன். |
| தாமோதரன் | கயிற்றினாற்கட்டப்பட்ட வயிற்றினையுடையவன், வயிற்றிலே துளவமாலையுடையவன். |
| ० முராரி | முராசுரனுக்குப் பகைவன். |
| நேமி | நிமிமரபிற்பிறந்தவன், நடத்துவோன். (கஉ) |

வலவன்றேவகிதன்மைந்தன்வனமாலிபடியிடந்தோன்
சலசலோசனனனந்தசயனன்பீதாம்பரன்பேர்
உலகளந்தருள்வோன்பஞ்சாயுதனுலகுண்டபெம்மான்
அலகைதன்முலையோடாவியருந்தினோனாரசிங்கன்.

| பெயர். | பொருள். |
|---|---|
| வலவன் | (அருச்சுனனுக்குத்) தேர்ப்பாகனானவன். |
| தேவகிமைந்தன் | தேவகியென்பவளுடைய புதல்வன். |
| வனமாலி | துளசிமாலை அணிபவன். |
| படியிடந்தோன் | பூமியைக்கிழித்தவன் |
| சலசலோசனன் | தாமரைப்பூப்போன்ற கண்ணுடையவன். |
| அனந்தசயனன் | சேடனாகிய படுக்கையுடையவன். |
| பீதாம்பரன் | பொன்வஸ்திரமுடையவன். |
| உலகளந்தருள்வோன் | உலகத்தையளந்தவன். |
| ‡ பஞ்சாயுதன் | ஐந்தாகிய படையுடையவன். |
| உலகுண்டபெம்மான் | பூமியையுண்டபெருமான். |
| அலகைமுலையோடாவியருந்தினோன் | பூதனையென்னும் பசாசினை முலைப்பாலோடுண்டவன். |
| நாரசிங்கன் | மனுடவடிவும் சிங்கவடிவுமான உருவமுடையவன். (கங) |

அரவணைச்செல்வன்கண்ணனறிதுயிலமர்ந்தமூர்த்தி
பிரமனைப்பெற்றதாதைபின்னைகேள்வன்முகுந்தன்
கரியவனெடியோன்காவற்கடவுணாரணனேழேழே
அரியின்பேராகுமற்றுமபிதானமநந்தமாமே.

*ககுத்தன்-சூரியவமிசத்துள்ள ஓரரசன். ०முரன்-நரகாசுரனுடைய தமையன்.
‡ பஞ்சாயுதங்களாவன: வில், வாள், சங்கு, சக்கரம், தண்டு என்பன.

| பெயர். | பொருள். |
|---|---|
| அரவணைச்செல்வன் | பாம்பணையிற் கிடப்பவன். |
| கண்ணன் | நீருண்டமேகம்போற் கரியவன், எல்லாஞ்செய்பவன். |
| அறிதுயிலமர்ந்தமூர்த்தி | அறியும் (யோக) நித்திரைசெய்பவன். |
| பிரமனைப்பெற்றதாதை | பிரமாவைப் பெற்றவன். |
| ‡ பின்னைகேள்வன் | நப்பின்னை என்பவளுக்கு நாயகன், இலக்குமிக்கு நாயகன். |
| முகுந்தன் | மோக்ஷங்கொடுப்பவன். |
| கரியவன் | கருநிறமுடையவன். |
| நெடியோன் | நீண்டவடிவத்தையுடையவன். |
| காவற்கடவுள் | காத்தற்றொழிற்குக் கடவுள். |
| நாரணன் | சலத்திலேவசிப்பவன், நரசன்மமடைபவன். (கச) |

பிரமன்மேதினிபடைத்தோன்பிதாமகன்பிதாவிதாதா
வரனயன்மலரோனிந்தமண்பொதுத்தந்தைவேதா
இரணியகருப்பன்போதனினியமாலுந்திவந்தோன்
குரவனோதிமமுயர்த்தகொடியினனன்னவூர்தி.

பிரமன்பெயர்.

| பெயர். | பொருள். |
|---|---|
| பிரமன் | வேதமோதுவோன், வளர்ச்சியடைபவன். |
| மேதினிபடைத்தோன் | உலகினைச்சிருட்டித்தவன். |
| பிதாமகன் | தந்தையாயுள்ளார்க்குந் தந்தை. |
| பிதா | உலகிற்குத் தந்தை. |
| விதாதா | உலகைச் சிருட்டித்தவன். |
| வரன் | (தேவர்களுட்) சிரேட்டன். |
| அயன் | விட்டுணுவிடத்திற்பிறந்தவன். |
| மலரோன் | தாமரைப்பூவிலிருப்பவன். |
| மண்பொதுத்தந்தை | பூமிக்குப் பொதுவான பிதா. |
| வேதா | சிருட்டிப்பவன். |
| இரணியகருப்பன் | பொன்மயமான கருப்பமுடையவன், கருவிற் பொன்னுடையவன். |
| போதன் | அறிவுடையவன். |
| மாலுந்திவந்தோன் | விட்டுணுவின் உந்தியினின்றுமுதித்தவன். |
| குரவன் | பெருமையுடையவன். |
| ஓதிமமுயர்த்தகொடியினன் | அன்னக்கொடியுடையவன். |
| அன்னவூர்தி | அன்னவாகனமுடையவன். (கரு) |

இறைசதானந்தனீண்டவெண்கணன்விதிசுயம்பு
மறையவனநந்தன்ஞானிமான்மகன்வாணிகேள்வன்
முறைதெரிபகவன்வானோர்முதுவன்நான்முகன்விரிஞ்சன்
நறைமலிகமலயோனிநாமமாறைந்துமாமே.

| பெயர். | பொருள். |
|---|---|
| இறை | சர்வலோகத்திற்குந் தலைவன். |
| * சதானந்தன் | வெகுமகிழ்ச்சியுடையவன். |
| எண்கணன் | எட்டுக் கண்களுடையவன். |
| விதி | எல்லாஞ்சிருட்டிப்பவன். |
| சுயம்பு | தானேதோன்றினவன். |
| மறையவன் | வேதங்களையோதுவோன். |
| அநந்தன் | முடிவில்லாதவன். |
| ஞானி | அறிவுடையவன். |
| மான்மகன் | விட்டுணுவின் மகன். |
| வாணிகேள்வன் | நாமகளுக்குநாயகன். |
| பகவன் | ஐசுவரியம் முதலிய ஆறுமுடையவன். |

‡ நப்பின்னை—மிதிலையரசன்மகள். * சதம்—வெகு.

| பெயர். | பொருள். | பெயர். | பொருள். |
|---|---|---|---|
| வானோர்முதுவன் | தேவருள்ளே மிக்கவன். | விரிஞ்சன் | சிருட்டிப்பவன், அன்னவாகனமுடையவன். |
| நான்முகன் | நான்கு முகங்களுடையவன். | கமலயோனி | விட்டுணுவின் உந்திக்கமலத்தைப் பிறப்பிடமாகவுடையவன். |

தருமராசன்முனீந்திரன்சினன்பஞ்சதாரைவிட்டே
அருள்சுரந்தவுணர்க்கூட்டுந்ததாகதனாதிதேவன்
விரவுசாக்கியனேசைனன்விநாயகன்சினந்தவிர்ந்தோன்
அரசுநீழலிலிருந்தோனறிவரன்பகவன்செல்வன்.

## புத்தன்பெயர்.

புத்தன்—(எல்லாவற்றையும் கணபங்கமென்று) நினைப்பவன்.
தருமராசன்— கொல்லாமை வாய்மை முதலியதருமங்களுக்குத்தலைவன்.
முனீந்திரன்-முனிவருள்ளேமிக்கவன்.
சினன்—(சம்சாரத்தை) வென்றவன்.
ததாகதன்—நல்லறிவுடையவன்.
ஆதி—முதல்வன்.
தேவன்—ஒளியுடையவன்.
சாக்கியன்— தேக்கமரச்சோலையிலிருப்பவன், சாக்கியமரபிற் பிறந்தவன்.
சைனன்—உபாசகன்.
விநாயகன்—நன்மைபோதிப்பவன்,மேலானவன்.
சினந்தவிர்ந்தோன்— கோபமில்லாதவன்.
அரசுநீழலிலிருந்தோன்— அரசமரநீழலில் இருந்தவன்.
வரன்—மேலானவன்.
பகவன்—மேன்மைமுதலியஆறுமுடையவன், மேலானவன்.
செல்வன்—சிறப்புடையவன். (கஎ)

அண்ணலேமாயாதேவிசுதனகளங்கமூர்த்தி
நண்ணியகலைகட்கெல்லாநாதன்முக்குற்றமில்லோன்
எண்ணில்கண்ணுடையோன்வாமனேற்றபுண்ணியத்தின்மூர்த்தி
புண்ணியமுதல்வன்சாந்தன்பூமிசைநடந்தோன்புத்தன்.

அண்ணல்—பெருமையுடையவன்.
மாயாதேவிசுதன்—மாயாதேவியுடையமகன்.
அகளங்கமூர்த்தி—குற்றமில்லாத வடிவமுடையவன்.
கலைகட்கெல்லா நாதன்—கலைகளுக்குத் தலைவன்.
முக்குற்றமில்லோன்—மூன்று குற்றமுமில்லாதவன்.
எண்ணில்கண்ணுடையோன் — பலகண்களுடையவன்.
வாமன்—அழகுடையவன்.
புண்ணியத்தின்மூர்த்தி—புண்ணியவடிவமுடையவன்.
புண்ணியமுதல்வன்—புண்ணியத்துக்குத்தலைவன்.
சாந்தன்—பொறுமையுடையோன்.
பூமிசைநடந்தோன் — பூவின்மேற்சென்றவன். (கஅ)

மேகவாகனன்வேள்விக்குவேந்தன்விண்முழுதுமாளி
பாகசாதனனேவச்சிரபாணிகோபதிசிறப்பாம்

நாகநீணகர்க்குநாதனான்மருப்பியானையூர்தி
போகிவாசவனேவேந்தன்புரந்தரன்புலவன்சக்கிரன்.

இந்திரன்பெயர்.

| பெயர். | பொருள். |
| --- | --- |
| இந்திரன் | பகைவரைப்போக்குவோன், சகல நன்மை தீமைகளையுங் காண்பவன், நெல்லுமுதலிய தானியங்களைக் கொடுப்பவன், பெருமகிமையுடையவன். |
| மேகவாகனன் | மேகத்தினை வாகனமாகவுடையவன். |
| வேள்விக்குவேந்தன் | யாகங்களுக்குத் தலைவன். |
| விண்முழுதுமாளி | விண்ணுலகமுழுதுமாள்பவன். |
| பாகசாதனன் | *பாகனென்னுமசுரனைக் கொன்றவன். |
| வச்சிரபாணி | வச்சிராயுதத்தைக் கையிலுடையவன். |
| கோபதி | விண்ணுலகத்துக்குத் தலைவன். |
| நாகநகர்க்குநாதன் | தேவலோகத்துக்குத் தலைவன். |
| நான்மருப்பியானையூர்தி | அயிராவதயானையை வாகனமாக வூர்பவன். |
| போகி | போகங்களுடையவன். |
| வாசவன் | செல்வமுடையவன். |
| வேந்தன் | ஒளியுடையவன். |
| புரந்தரன் | பகைவருடம்பைப் பிளப்பவன். |
| புலவன் | அறிஞன். |
| சக்கிரன் | துட்டர்களை வெல்வதில் வல்லவன். (கக) |

மருதநன்னிலத்துவேந்தன்மருத்துவன்வானோர்கோமான்
புருகூதன்சசிமணாளன்புரோகிதன்கௌசிகன்னே
கரியவன்சுநாசீரன்னாகண்டலனுடன்வலாரி
அரிசதக்கிரதுநீண்டவாயிரங்கண்ணனிந்திரன்.

| பெயர். | பொருள். |
| --- | --- |
| மருதநிலத்துவேந்தன் | மருதநிலத்தலைவன். |
| மருத்துவன் | தேவர்களையுடையவன். |
| வானோர்கோமான் | தேவருக்கரசன். |
| புருகூதன் | யாகத்தில் அழைக்கப்படுபவன். |
| சசிமணாளன் | இந்திராணிக்குநாயகன். |
| புரோகிதன் | தேவகாரியங்களில் முன்வைக்கப்படுபவன். |
| கௌசிகன் | குசிகர்மரபிலுள்ளவன், கூகைவடிவங் கொண்டவன். |
| கரியவன் | கருநிறமுடையவன். |
| சுநாசீரன் | நல்ல சேனைகளுடையவன். |
| ஆகண்டலன் | சத்துருக்களைக் கண்டிப்பவன். |
| வலாரி | வலாசுரனுக்குப் பகைவன். |
| அரி | சத்துருக்களைச் சங்கரிப்பவன். |
| சதக்கிரது | நூறுயாகங்களுடையவன். |
| ஆயிரங்கண்ணன் | ஆயிரங் கண்களுடையவன். (உ0) |

அங்குசபாசமேந்தியம்பிகைதனயன்முன்னோன்
ஐங்கரன்மூத்தோனொற்றையணிமருப்பினனேரம்பன்
கங்கைபெற்றோன்முக்கண்ணன்கணபதியீசன்மைந்தன்
வெங்கயமுகனேயாகுவாகனன்விநாயகன்பேர்.

* பாகன் — விருத்திராசுரனுடைய தம்பி.

## விநாயகன்பெயர்.

**பெயர். பொருள்.**

விநாயகன்—தன்னின் மேலான நாயகனில்லாதவன், துட்டர்களையும் இடையூறுகளையுங் கண்டிப்போன்.
அங்குசபாசமேந்தி— அங்குசத்தையும் பாசத்தையுந் தரித்தவன்.
அம்பிகைதனயன்—உமையின்மகன்.
முன்னோன் — யாவராலும் முன்னாகக் கொள்ளப்படுபவன்.
ஐங்கரன்— ஐந்தாகிய கைகளுடையவன்.
மூத்தோன்—மூத்தபிள்ளை.
ஒற்றைமருப்பினன்— ஒருகொம்புடையவன்.
ஏரம்பன்—உருத்திரனுடைய சமீபத்திலிருப்பவன், (அடியாரை) வளர்விப்பவன்.
கங்கைபெற்றோன்—கங்கையைத் தரித்தவன், கங்கையாற் பெறப்பட்டவன்.
முக்கண்ணன்—மூன்று கண்களுடையவன்.
கணபதி—கணங்களுக்குத் தலைவன்.
ஈசன்மைந்தன்—சிவனுக்கு மகன்.
கயமுகன்— யானைமுகம்போன்ற முகமுடையவன்.
ஆகுவாகனன்— பெருச்சாளிவாகனமுடையவன். (௨௧)

உக்கிரனழற்கண்வந்தோனுமைமகன்சிம்புளானோன்
முக்கணன்சடையோன்யானைமுகவனுக்கிளையோன்வில்லி
செக்கர்வானிறத்தன்குரோதன்சிறுவிதிமகஞ்சிதைத்தோன்
மிக்கபத்திரைக்குக்கேள்வன்வீரபத்திரன்பேராமே.

## வீரபத்திரன்பெயர்.

வீரபத்திரன்—வீரத்தினாலே மிக்கவன்.
உக்கிரன்—கோபமுடையவன்.
அழற்கண்வந்தோன்—சிவனுடைய நெற்றிக் கண்ணினின்றும் வந்தவன்.
உமைமகன்—உமையின் புத்திரன்.
சிம்புளானோன்— எண்காற்பறவைவடிவங் கொண்டவன்.
முக்கணன் —மூன்றுகண்களுடையவன்.
சடையோன்—சடையுடையவன்.
யானைமுகவனுக்கிளையோன்— விநாயகருக்குத் தம்பி.
வில்லி—வில்லுடையவன்.
செக்கர்வானிறத்தன்— செக்கர்வானம் போலும் நிறமுடையவன்.
குரோதன்—கோபமுடையவன்.
சிறுவிதிமகஞ் சிதைத்தோன்—தக்கனுடைய யாகம் அழித்தவன்.
பத்திரைக்குக்கேள்வன்—பத்திரைக்கு நாயகன். (௨௨)

முருகன்வேள்சாமியாறுமுகன்குகன்குழகன்மாயோன்
மருகன்சேய்கார்த்திகேயன்வரைபகவெறிந்தோன்செட்டி
அரன்மகன்கங்கைமைந்தனண்டலைக்கொடியுயர்த்தோன்
சரவணபவன்கடம்பன்றாரகற்செற்றோனுசான்.

## கந்தன்பெயர்.

கந்தன்—சேர்க்கப்பட்டவன், சத்துருக்களையழிப்பவன்.
முருகன் — †தெய்வத்தன்மையுடையவன், இளமையுடையவன்.

† முருகு—தெய்வத்தன்மை, இளமை.

| பெயர். | பொருள். |
|---|---|
| வேள் | விரும்பப்படுபவன். |
| சாமி | எல்லாமுடையவன். |
| ஆறுமுகன் | ஆறுமுகங்களுடையவன். |
| குகன் | காப்பவன், இரகசியமானவன், தன்சேனைகளைக் காப்பவன். |
| மாயோன்மருகன் | விட்டுணுவுக்கு மருகன். |
| சேய் | செந்நிறமுடையவன். |
| கார்த்திகேயன் | கார்த்திகைகளின் புத்திரன். |
| வரைபகவெறிந்தோன் | (கிரௌஞ்ச) மலையைப் பிளந்தவன். |
| செட்டி | வைசியனாகப் பிறந்தவன். |
| அரன்மகன் | சிவனுக்கு மகன். |
| கங்கைமைந்தன் | கங்கையின் மகன். |
| ஆண்டலைக்கொடியுயர்த்தோன் | கோழிக்கொடியுடையவன். |
| சரவணபவன் | சரவணவாவியிற் பிறந்தவன். |
| கடம்பன் | கடப்பமாலை தரித்தவன். |
| தாரகற்செற்றோன் | தாரகாசுரனைக் கொன்றவன். |
| ஆசான் | குரு. (உ௩) |

வேய்ந்தபூங்குறிஞ்சிவேந்தன்வேலினுக்கிறைவிசாகன்
சேந்தன்காங்கேயன்செவ்வேள்சிலம்பன்மாமஞ்ஞையூர்தி
வாய்ந்தசூர்ப்பகைவன்வள்ளிமணவாளன்றெய்வயானை
காந்தனேகுமரன்கந்தன்கலையுணர்புலவனும்பேர்.

| | |
|---|---|
| குறிஞ்சிவேந்தன் | குறிஞ்சிநிலத்திற்குத் தலைவன். |
| வேலினுக்கிறை | வேற்படைக்குத் தலைவன். |
| விசாகன் | விசாகநாளிற் பிறந்தவன். |
| சேந்தன் | திருச்செந்தூரையுடையவன். |
| காங்கேயன் | கங்கையின் புத்திரன். |
| செவ்வேள் | செம்மையாகியவேள். |
| சிலம்பன் | மலைகளையுடையவன். |
| மஞ்ஞையூர்தி | மயில்வாகனமுடையவன் |
| சூர்ப்பகைவன் | சூரனுக்கு விரோதி. |
| வள்ளிமணவாளன் | வள்ளிநாயகிக்கு நாயகன். |
| தெய்வயானைகாந்தன் | தெய்வயானையம்மைக்கு நாயகன். |
| குமரன் | அருவருப்புகளையழிப்பவன், என்றுமிளமையுடையவன். |
| புலவன் | அறிவுடையவன். (உ௪) |

திருமகண்மைந்தன்மாரன்சித்தசன்சம்பராரி
உருவிலிமன்மதன்மீனுறுகொடியுயர்த்ததோன்றல்
இரதிகாதலன்வசந்தனெழில்பெறுவேனிலாளி
கருதியகருப்புவில்லிகந்தர்ப்பன்மதன்பூவாளி.

### காமன்பெயர்.

| | |
|---|---|
| காமன் | காமத்தினையுண்டாக்குவோன். |
| திருமகண்மைந்தன் | இலக்குமியின் புத்திரன். |
| மாரன் | விகாரமுடையார்க்கு மரணவேதனைசெய்வோன். |
| சித்தசன் | மனசிற்பிறந்தவன். |
| சம்பராரி | சம்பரனுக்குப் பகைவன். |
| உருவிலி | வடிவமில்லாதவன். |
| மன்மதன் | புத்தியை மயக்குவோன். |
| மீன்கொடியுயர்த்ததோன்றல் | மீன்கொடியுடையவன். |
| இரதிகாதலன் | இரதிதேவிக்கு நாயகன். |
| வசந்தன் | வேனிற்காலத்தலைவன். |
| வேனிலாளி | வேனிற்காலத்தலைவன். |

| பெயர். பொருள். | பெயர். பொருள். |
|---|---|
| கருப்புவில்லி— கரும்பாலாயவில்லுடையவன். | மதன்—மயக்கஞ்செய்பவன். |
| கந்தர்ப்பன்—கெட்ட கர்வமுள்ளவன். | பூவாளி — புட்பமாகிய பாணமுடையவன். (உரு) |

திங்கள்வெண்குடையோன்றென்றற்றேரினன்வில்லிமோகன்
ஐங்கணைக்கிழவனெய்யுமலர்க்கணைவேளநங்கன்
செங்கண்மான்மைந்தன்மிக்கதிறன்மனோபவன்மனோசன்
அங்கசன்மனோபுவேரீராழிவெம்முரசோன்காமன்.

திங்கட்குடையோன் — சந்திரனைக் குடையாகவுடையவன்.
தென்றற்றேரினன்— தென்றற்காற்றைத் தேராகவுடையவன்.
வில்லி—வில்லையுடையவன்.
மோகன்—மயக்கஞ்செய்பவன்.
ஐங்கணைக்கிழவன்—ஐந்து பாணங்களுக்குத் தலைவன்.
வேள்—விருப்பத்திற்குரியோன்.
அநங்கன்—உருவமில்லாதவன்.
மான்மைந்தன்—விட்டுணுவின் மகன்.
மனோபவன்—மனசிற்பிறந்தவன்.
மனோசன்—மனசிற்பிறந்தவன்.
அங்கசன்—விருப்பமுண்டாக்குவோன்.
மனோபு—மனசிற்பிறந்தவன்.
ஆழிமுரசோன்—சமுத்திரத்தை முரசமாகவுடையவன். (உசு)

முத்தனேகுமரன்பிள்ளைமுடுவல்வெம்படையோன்காரி
சித்தன்கேத்திரபாலன்னேசெந்தொடைக்குரியகோமான்
வித்தகன்ஞாளியூர்திவிறற்கருங்குதிரையாளி
வைத்தசீர்வடுகனின்னவைரவனுமமாமே.

## வைரவன்பெயர்.

வைரவன்—பயஞ்செய்பவன்.
முத்தன்—மகிழ்ச்சியுடையவன்.
குமரன்—அருவருப்புகளை யழிப்பவன்.
முடுவற்படையோன் — நாய்ப்படையுடையவன்.
காரி—கருநிறமுடையவன்.
சித்தன்—சித்திகளையுடையவன்.
கேத்திரபாலன்—ஆலயங்களைக்காப்பவன்.
வித்தகன்—நாகரிகமுடையவன்.
ஞாளியூர்தி—நாய்வாகன முடையவன்.
கருங்குதிரையாளி — கருங்குதிரையுடையவன்.
வடுகன்—பிரமசரியமுடையவன். (உஎ)

காரியேபுறத்தவன்பூங்கடல்வண்ணனெடியசாத்தாப்
பூரணைகேள்வன்யோகிபுட்கலைதன்மணாளன்
ஒருமாசாத்தன்செண்டாயுதன்வெள்ளையானையூர்தி
ஆரியனறத்தைக்காப்போனரிகரகுமரனையன்.

## ஐயன்பெயர்.

**பெயர். பொருள்.**

ஐயன்—வணங்கப்படத்தக்கவன்.
காரி—கருநிறமுடையவன்.
கடல்வண்ணன்—கருநிறமுடையவன்.
சாத்தா—(துட்டரைத்) தண்டிப்பவன்.
பூரணைகேள்வன்—பூரணைக்கு நாயகன்.
யோகி—யோகமுடையவன்.
புட்கலைமணாளன்—புட்கலைக்குநாயகன்
மாசாத்தன்—மகாநிக்கிரகமுடையவன்.
செண்டாயுதன்—செண்டினை ஆயுதமா
கவுடையவன்.
வெள்ளையானையூர்தி — வெள்ளையானை
வாகனமுடையவன்.
ஆரியன்—அருச்சிக்கத்தக்கவன்.
அறத்தைக்காப்போன் — தருமத்தைக்
காப்பவன்.
அரிகரகுமரன் — மோகினிவடிவங்கொ
ண்ட விட்டுணுவுக்குஞ் சிவனுக்கு
ம் மகன். (உஅ)

அரனதுதோழனேகின்னரர்பிரானளகையாளி
புருடவாகனனேசோமன்புட்பகவிமானமுள்ளோன்
இருநிதிக்கிழவனேகபிங்கலனியக்கர்கோமான்
மரகதன்றனதன்மந்திரிவைச்சிரவணன்குபேரன்.

## குபேரன்பெயர்.

குபேரன்—அருவருப்பான சரீரமுடை
யவன்.
அரனதுதோழன்—சிவனுக்கு நண்பன்.
கின்னரர்பிரான் — கின்னரர்களுக்குத்
தலைவன். [பவன்.
அளகையாளி—அளகை நகரியையாள்
புருடவாகனன்—நரவாகனமுடையவன்
சோமன்—நன்மைசெய்பவன்.
புட்பகவிமானமுள்ளோன் — புட்பம்
போன்ற விமானமுடையவன்.
இருநிதிக்கிழவன்—சங்கநிதி பதுமநிதி
களுக்குத் தலைவன்.
ஏகபிங்கலன்— பொன்னிறமான ஒற்
றைக்கண்ணுடையவன்.
இயக்கர்கோமான்—இயக்கருக்குத் தலை
வன்.
தனதன்—திரவியங்கொடுப்பவன், தன
த்தைக் காப்பவன்.
வைச்சிரவணன்—‡விச்சிரவாவினுடை
ய புதல்வன். (உகூ)

சமன்செங்கோற்கடவுள்கூற்றுத்தருமனந்தகனேசண்டன்
நமன்வைவச்சுதனேமற்றைநடுவனேதென்றிசைக்கோன்
யமனரிமறலியேமற்றெருமையூர்தியுமாமிப்பாற்
கமையில்கான்மறன்மடங்கல்காலன்பாசத்தனும்பேர்.

## யமன்பெயர்.

யமன்—சங்காரஞ் செய்வோன்.
சமன்—நடுநிலையுடையவன். [ள்.
செங்கோற்கடவுள்—நீதிசெய்யுங் கடவு
கூற்று—உயிர்களை யுடம்பினின்று பிரி
தருமன்—நீதிசெய்பவன். [ப்போன்.
அந்தகன்—அழிவுசெய்பவன்.
சண்டன்—கடுங்கோபமுடையவன்.
நமன்—நியமித்தலுடையவன்.
வைவச்சுதன்—சூரியனுடைய மகன்.
நடுவன்—நடுநிலையுடையவன்.
தென்றிசைக்கோன்— தென்திசைக்கு
அரி—முடிவுசெய்பவன். [த் தலைவன்.
மறலி—வலிமையுடையவன். [வன்.
எருமையூர்தி— எருமைவாகனமுடைய

‡ விச்சிரவா—புலத்தியமுனிவருடைய மகன்.

## காலன்பெயர்.

பெயர். — பொருள்.

காலன்—இருவினைகளையுங் கணக்கிடுவோன், வயசுகணிப்போன்.
கால்—காலத்தைச்செய்பவன்.
மறல்—வலியுடையவன்.
மடங்கல்—இறுதிசெய்வோன்.
பாசத்தன்—பாசமுடையவன். (ரு0)

மரகதவல்லிபூகமாநிழலுற்றவஞ்சி
பரமசுந்தரியியக்கிபகவதியம்மையெங்கள்
அருகனைமுடிதரித்தாளம்பிகையறத்தின்செல்வி
தருமதேவதைபேரம்பாலிகையென்றுஞ்சாற்றலாமே.

## தருமதேவதையின்பெயர்.

தருமதேவதை—தருமத்தெய்வம்.
மரகதவல்லி—
பூகநிழலுற்றவஞ்சி—கமுகநிழலிலிருக்கும் பெண்.
பரமசுந்தரி—பேரழகுடையவள்.
இயக்கி—
பகவதி—மேன்மை, வீரம் முதலியனவுடையவள்.
அம்மை—தாய்போல்பவள்.
அருகனைமுடிதரித்தாள்—
அம்பிகை—தாயொப்பவள்.
அறத்தின்செல்வி—தருமமாகிய செல்வமுடையவள்.
அம்பாலிகை—தாயொப்பவள். (ருக)

அரனிடத்தவள்காமக்கோட்டத்தியம்பிகையேமாதாத்
தருமத்தின்செல்விதேவிசாம்பவிமலைமடந்தை
பரைசிவைகௌரிமுக்கட்பார்ப்பதியோடுபவானி
உரைகெழுசத்திநாரியுமைபெயர்மூவைந்தாமே.

## உமையின்பெயர்.

உமை — பெண்ணே! உ! வேண்டாம் (என்று தவத்தினின்று தடுக்கப்பட்டவள்,) காப்பவள்.
அரனிடத்தவள்—சிவனுடைய இடப்பாகத்திருப்பவள்.
காமக்கோட்டத்தி — காமக்கோட்டமுடையவள்.
அம்பிகை—(உலகத்துக்குத்) தாய்.
மாதா—தாய்.
தருமத்தின்செல்வி—(முப்பத்திரண்டு) அறங்களின் சிறப்புடையவள்.
தேவி—பிரகாசமுடையவள்.
சாம்பவி—சம்புவின் மனைவி.
மலைமடந்தை—மலை (யரசனுடைய) மகள்.
பரை—மேலானவள்.
சிவை—நன்மைசெய்பவள், சிவனுடைய மனைவி.
கௌரி—பச்சைநிறமுடையவள்.
பார்ப்பதி—மலையின்புதல்வி.
பவானி—பவனுடைய மனைவி.
சத்தி—வலிமையுடையவள்.
நாரி—மேலானபெண். (ருஉ)

வரநதிமேமந்தாகினிதிரிபதகைமற்றைச்
சுரநதிகங்கைபேர்சானவிபகீரதியுஞ்சொல்லும்
பெருகுமூதணங்குமோடிபேசியகொற்றிசூரி
மருவியவடுகிமாரிவடுகன்றாய்காடுகாள்பேர்.

கங்கையின்பெயர்.

| பெயர். | பொருள். | பெயர். | பொருள். |
|---|---|---|---|
| ‡ கங்கை | சிவன் சடையினின்று பூமியையடைந்தது, விசிட்டமானதானத்திலே செல்லுத லுடையது, உயிர்களை உயர்ந்தநிலையிற்போக்குவது. | திரிபதகை | (சுவர்க்க மத்திய பாதலமாகிய) மூன்றுலகங்களிலுஞ் செல்வது. |
| வரநதி | மேலான நதி. | சுரநதி | தேவர்களுடைய நதி. |
| மந்தாகினி | மெல்ல வளைந்து செல்லுவது. | சானவி | சன்னுமுனிவருடைய செவியினின்றும் வந்தது. |
| | | பகீரதி | பகீரதனாற் கொண்டுவரப்பட்டது. |

காடுகாள்பெயர்.

| | | | |
|---|---|---|---|
| காடுகாள் | காட்டில் வாசஞ்செய்தற்குரியவள்; (இது காடுகிழாஅள் என்பதன் மரூஉ.) | கொற்றி | வெற்றியுடையவள். |
| மூதணங்கு | பழையபெண். | சூரி | வீரமுடையவள். |
| மோடி | பலமுடையவள். | வடுகி | வடுகனை (ப்பிள்ளையாக) உடையவள். |
| | | மாரி | கொலைசெய்பவள். |
| | | வடுகன்றாய் | வைரவருடைய தாய். () |

மாக்கடற்பிறந்தகோதைமாவரிப்பிரியைசெய்யாள்
ஆக்கம்பொன்பொறிசீதேவியலர்மகள்பொருளின்செல்வி
தாக்கணங்கிளையாள்பூமின்னிலக்குமிசலசைசெல்வந்
தேக்குமிந்திரையீரெட்டுந்திருமகளுமமாமே.

திருமகள்பெயர்.

| | | | |
|---|---|---|---|
| திருமகள் | பொருட்குரிய பெண், அழகுடையவள். | பொருளின்செல்வி | பொருட்செல்வமுடையவள். |
| கடற்பிறந்தகோதை | பாற்கடலிற் பிறந்த பெண். | தாக்கணங்கு | தகுதியுடையபெண், கண்டார்க்கு விருப்புண்டாக்கித்தாக்கும் பெண். |
| மா | உலகமாதா, திரவியமுடையவள். | இளையாள் | பின்பிறந்தவள். |
| அரிப்பிரியை | விட்டுணுவின் மனைவி. | பூமின் | (தாமரைப்) பூவில்வாழும் பெண். |
| செய்யாள் | செம்மையுடையவள். | இலக்குமி | எப்பொருளையுங் காண்பிப்பவள். |
| ஆக்கம் | செல்வமுடையவள். | சலசை | தாமரைப்பூவிலிருப்பவள். |
| பொன் | பொன்னுடையவள். | இந்திரை | மேலான செல்வமுடையவள். (௩௪) |
| பொறி | செல்வமாயுள்ளவள். | | |
| சீதேவி | எல்லாராலும் சேவிக்கப்படுபவள். | | |
| அலர்மகள் | (தாமரை) மலரிலிருப்பவள். | | |

‡ இதன் விவரத்தை ஆ. முத்துத்தம்பிப்பிள்ளையுடைய அபிதானகோசத்திற் காண்க.

கலைமகள்பனுவலாட்டிகாயத்திரிஞானமூர்த்தி
உலகமாதாப்பிராமியொள்ளியவெள்ளைமெய்யாள்
இலகுவெண்சலசமுற்றாள்பாரதியிசைமடந்தை
மலரயன்மனைவிவாக்காள்வாணிநாமகள்பேராமே.

நாமகள்பெயர்.

| பெயர். | பொருள். | பெயர். | பொருள். |
| --- | --- | --- | --- |
| நாமகள் | நாவில்வாழ்பவள். | வெண்சலசமுற்றாள் | வெண்டாமரையிலிருப்பவள். |
| கலைமகள் | சாத்திரங்கட்குரியவள். | பாரதி | பரதனென்னும் யாகபுரோகிதனுடைய துதிக்குக் காரணமாயிருப்பவள். |
| பனுவலாட்டி | நூலுக்குரியவள். | இசைமடந்தை | இசைக்குரியவள். |
| காயத்திரி | பாடுவோனைக் காப்பவள். | அயன்மனைவி | பிரமாவின் மனைவி. |
| ஞானமூர்த்தி | ஞானரூபி. | வாக்காள் | வாக்கிலுள்ளவள். |
| உலகமாதா | உலகத்திற்குத்தாய். | வாணி | சொல்லப்படுபவள். (௬௫) |
| பிராமி | பிரமாவின் மனைவி. | | |
| வெள்ளைமெய்யாள் | வெண்ணிறமேனியுடையவள். | | |

சேட்டையிந்திரைக்குமூத்தாள்சீர்கேடிசிறப்பிலாதாள்
நீட்டியவேகவேணிநெடுங்காகத்துவசமுற்றாள்
கேட்டையேகெடலணங்குகழுதைவாகனிகேடெல்லாம்
மூட்டியகலதிதௌவைமுகடிமூதேவியாமே.

மூதேவியின்பெயர்.

| | | | |
| --- | --- | --- | --- |
| மூதேவி | மூத்ததேவி. | காகத்துவசமுற்றாள் | காகக்கொடியுடையவள். |
| சேட்டை | மூத்தவள். | கேட்டை | |
| இந்திரைக்குமூத்தாள் | இலக்குமிக்குமூத்தவள். | கெடலணங்கு | கேட்டைத்தரும்பெண். |
| சீர்கேடி | சீர்கெட்டவள். | கழுதைவாகனி | கழுதைவாகனமுடையவள். |
| சிறப்பிலாதாள் | சிறப்பில்லாதவள். | கலதி | கீழ்மையுடையவள். |
| †ஏகவேணி | எண்ணெய்பூசுதல், வாருதல் முதலிய சுத்திக்கிரியை செய்யப்படாது முதுகிலேதூங்கும் ஏகபந்தமான சடையுடையவள். | தௌவை | மூத்தவள். |
| | | முகடி | (௬௬) |

பொருவிலிந்திராணிசெய்யபுலோமசைசசிபேரின்பம்
தருமயிராணியிந்திரன்மனைவிபேர்சயந்தன்மைந்தன்
அரமகளரம்பையென்பவமரர்தம்மாதின்பேரே
விரவுசூரணங்குதெய்வமெல்லியர்பொதுப்பேர்சொல்லும்.

† இதன்பொருள் அத்யாத்மராமாயணவுரையிற் கண்டது.

### இந்திரன்மனைவியின்பெயர்.

| பெயர். | பொருள். | பெயர். | பொருள். |
|---|---|---|---|
| இந்திராணி | இந்திரனுடையமனைவி. | *அயிராணி | பூசிக்கத்தக்கவள், நன்கு மதிக்கப்படுபவள். |
| புலோமசை | புலோமனுடையபுதல்வி. | | |
| சசி | அன்னம்போல நடப்பவள். | | |

### இந்திரன்மைந்தன்பெயர்.

சயந்தன்—(சத்துருக்களை) வெல்லுபவன், அழகினுலெவரையும் வெல்வோன்.

### அமரர்மாதின்பெயர்.

அரமகள்—

அரம்பை—விருப்பங்கொடுப்பவள். ( )

### தெய்வமெல்லியர்பொதுப்பெயர்.

சூர்—

அணங்கு—

சூரிமாலினியெண்டோளிசூலிசண்டிகையேதேவி
வீரிமாதரிகங்காளிவேதாளியொடுமாதங்கி
தாரகற்செற்றதையல்பைரவிசிவைசாமுண்டி
ஆரணிவல்லணங்கோடையையாமளைமுக்கண்ணி.

### காளியின்பெயர்.

காளி—கருநிறமுடையவள்.
சூரி—வீரமுடையவள்.
மாலினி—கரியவள்.
எண்டோளி—எட்டுத்தோள்களுடையவள்.
சூலி—சூலமுடையவள்.
சண்டிகை—கோபமுடையவள், சண்டாசுரனைக்கொன்றவள்.
தேவி—பிரகாசமுடையவள்.
வீரி—வீரமுடையவள்.
மாதரி—
கங்காளி—கங்காளமுடையவள்.
வேதாளி—வேதாளவைரவசம்பந்தி.
மாதங்கி—மதங்கமுனியின் புதல்வி.
தாரகற்செற்றதையல்—தாரகாசுரனைக்கொன்றவள்.
பைரவி—அச்சங்கொடுப்பவள்.
சிவை—சிவனுடைய மனைவி.
சாமுண்டி—சண்டனையுமுண்டனையுங்கொல்லவந்தவள்.
ஆரணி—
வல்லணங்கு—வலிமையுடையவள்.
ஐயை—அருச்சிக்கப்படத்தக்கவள்.
யாமளை—பச்சைநிறமுடையவள்.
முக்கண்ணி — மூன்றுகண்களுடையவள். (௩அ)

அலகைவெங்கொடியுயர்த்தாண்மதுபதியாளியூர்தி
உலவியமாயையுற்றயோகினிகாளிநாமம்
வலவைசூர்மகடனேடுமாயவளிடாகினிப்பேர்
இலகுசன்மினிவஞ்சப்பெண்காளிதன்னேவல்செய்வாள்.

---

* அர்யாணி என்னும் ஆரியபதம் அயிராணி என்றாயிற்று.

| பெயர். | பொருள். | பெயர். | பொருள். |
|---|---|---|---|
| அலகைக்கொடியுயர்த்தாள் — பேய்க்கொடியுடையவள். | | ஆளியூர்தி—சிங்கவாகனமுடையவள். | |
| † மதுபதி—மதுவுக்குத்தலைவி. | | மாயை—மாயமுடையவள். | |
| | | யோகினி—யோகத்தையுடையவள். | |

## இடாகினியின்பெயர்.

இடாகினி—இடனென்பவனைக் கொல்லவந்தவள்.
வலவை—வல்லமையுடையவள்.
சூர்மகள்—
மாயவள்—மாயத்தையுடையவள்.

## காளியேவல்செய்மகளின்பெயர்.

சன்மினி—
வஞ்சப்பெண்—வஞ்சத்தையுடையவள்.()

அமரியெண்டோளிவெற்றியந்தரியம்பணத்தி
சமரிபாலைக்கிழத்திசயமகள்வீரச்செல்வி
குமரிமாமகிடற்செற்றாள்கொற்றவைசக்கிரபாணி
விமலைவண்கலையானத்திவிசயைநாரணியேவிந்தை.

## துர்க்கையின்பெயர்.

துர்க்கை—பிரயாசத்தாலறியப்படுபவள் காடுமுதலிய அரண்களிலேயிருப்பவள், ‡ துர்க்கனைக்கொன்றவள்.
அமரி—போரில்வல்லவள், அலங்கரித்தலில்லாதவள்.
எண்டோளி—எட்டுத்தோளுடையவள்.
அந்தரி—பிரமத்தைத்தரித்தவள்.
அம்பணத்தி—¶ மரக்காலென்னுங் கூத்துடையவள்.
சமரி—போரில்வல்லவள்.
பாலைக்கிழத்தி—பாலைநிலத்துக்குத்தலைவி.
சயமகள்—வெற்றியுடையவள்.
வீரச்செல்வி—வீரச்சிறப்புடையவள்.
குமரி—அழிவில்லாதவள்.
மகிடற்செற்றாள் — மகிடாசுரனைக்கொன்றவள்.
கொற்றவை —வெற்றியுடையவள்.
சக்கிரபாணி— சக்கிரப்படையைக் கையிலுடையவள்.
விமலை—மலமில்லாதவள்.
கலையானத்தி— மான்வாகனமுடையவள்.
விசயை—வெற்றியுடையவள்
நாரணி—எங்கும்வியாபகமுடையவள்.
விந்தை— (௪0)

நீலியேநெடியகாத்தியாயனிமேதிச்சென்னி
மேலிடருறமிதித்தமெல்லியல்கௌரியையை
மாலினுக்கிளையநங்கைபகவதிவாள்கைக்கொண்டாள்
சூலிசண்டிகையேகன்னிசுந்தரிதுர்க்கைநாமம்.

---

† மது—கள்ளு. ‡ "துர்க்கனைக்கொன்றலாற்றுற் றுர்க்கையாயினள்" என்பது காசிகாண்டம்; வச்சிரபஞ். கஅ.

¶ மரக்காலின்மேலே நின்றாடப்படுதலின் மரக்காலெனப்பட்டது; மரக்கால்—ஓரளவைக்கருவி.

| பெயர். | பொருள். |
|---|---|
| நீலி | கருநிறமுடையவள். |
| *காத்தியாயனி | கத்தியயர்மரபிற் பிறந்தவள். |
| மேதிச்சென்னி மிதித்தமெல்லியல் | மகிடாசுரனுடைய தலையைவெட்டி அதன்மேலேநின்றவள். |
| கௌரி | பச்சைநிறமுடையவள். |
| ஐயை | அருச்சிக்கப்படத்தக்கவள். |
| மாலினுக்கிளையநங்கை | விஷ்ணுவுக்குத் தங்கை. |
| பகவதி | மேன்மை, வீரம் முதலிய ஆறுமுடையவள். |
| வாள்கைக்கொண்டாள் | வாட்படைகையிற்கொண்டவள். |
| சூலி | சூலமுடையவள். |
| சண்டிகை | கோபமுடையவள், சண்டாசுரனைக்கொன்றவள். |
| கன்னி | கன்னித்தன்மையுடையவள். |
| சுந்தரி | அழகுடையவள். (௬௧) |

அமரர்பண்ணவர்புத்தேளிர்கடவுளரண்டரும்பர்
இமையவர்விபுதர்வானோரிலேகரேபுல்வர்விண்ணோர்
அமுதராதித்தர்மேலோரையரேசுரரேதீர்த்தர்
உமிழ்சுடர்மௌலிசூட்டுமுயர்நிலத்தவருந்தேவர்.

## தேவர்பெயர்.

| | |
|---|---|
| தேவர் | பிரகாசமுடையவர், கிரீடையுடையவர். |
| அமரர் | மரணமில்லாதவர். |
| பண்ணவர் | தகுதியுடையவர். |
| புத்தேளிர் | அறிவுடையவர். |
| கடவுளர் | மிக்கவர். |
| அண்டர் | ஆகாயத்திலிருப்பவர். |
| உம்பர் | மேலானவர். |
| இமையவர் | கண்ணிமையாதவர். |
| விபுதர் | விசேஷவறிவுடையவர். |
| வானோர் | வானிலிருப்பவர். |
| இலேகர் | கண்டம் முதலிய உறுப்புக்களிலே நல்ல ரேகையுடையவர், உயிர்களுடைய நன்மைதீமைகளை எழுதுவோர். |
| புல்வர் | அறிஞர். |
| விண்ணோர் | சுவர்க்கலோகத்திலிருப்பவர். |
| அமுதர் | மரணமில்லாதவர். |
| ஆதித்தர் | அதிதியின்புத்திரர். |
| மேலோர் | மேலானவர். |
| ஐயர் | பூசிக்கத்தக்கவர். |
| சுரர் | ‡பாற்கடலிற்றோன்றிய நறவமுண்டவர், நல்லொளியுடையவர், நன்மைசொல்பவர். |
| தீர்த்தர் | யாகசம்பந்தமுடையவர். |
| உயர்நிலத்தவர் | மேலுலகத்திலுள்ளவர். |

ஈணமிலணங்குபுத்தேளேற்றசூர்கடவுடேவே
ஆனதெய்வதமேதெய்வமாமெனவுரைப்பர்நூலோர்
தானவரவுணரோடுதைத்தியர்திதியின்மைந்தர்
ஏனையவசுரராகுநிசாசரரென்றுமேற்கும்.

---

* கதனுடைய மரபிற் பிறந்தவளென்பது வாசஸ்பத்தியம்.

‡ "வாருணிநறவம்பிறந்ததுபின்னர்மற்றதுநுகர்தலாற்றேவர் சீர்கெழுசுரராயினர்" என்பது கூர்மபுராணம்.

## தெய்வத்தின்பெயர்.

| பெயர். | பொருள். | பெயர். | பொருள். |
|---|---|---|---|
| தெய்வம் | பிரகாசமுடையது. | கடவுள் | மிக்கது. |
| அணங்கு | | தே | ஒளியுடையது. |
| புத்தேள் | | தெய்வதம் | பிரகாசமுடையது. |
| சூர் | | | |

## அசுரர்பெயர்.

அசுரர் — தேவத்துவமடையாதவர், அமிர்தம்பெறுதவர், உயிர்களைக்கவர்வோர், யாகபாகத்தால் விலக்கப்பட்டவர்.
தானவர்—†தனுவென்பவளிடத்திற்பிறந்தவர்.
அவுணர்—தாழ்வுடையவர், இழிவுடையவர்.
தைத்தியர்—திதியின்புத்திரர்.
திதியின்மைந்தர்—திதியின்புத்திரர்.
நிசாசரர்—இரவிற்சரிப்பவர். (௩௪)

நிருதரேபிசிதவூணர்நிசாசரரரக்கர்தீமை
தருமிரரக்கதர்பேர்சாலகடங்கடர்தானுமாகும்
விரவுவிஞ்சையர்பேர்வித்தியாதரரேகேசருமாங்கந்
தருவர்யாழ்வல்லோரேகாந்தருவர்கிங்கரருமாமே.

